විශ්‍රාම වැටුප් දෙපාර්තමේන්තුව
ஓய்வூதியத் திணைக்களம்
DEPARTMENT OF PENSIONS

මාලිගාවත්ත කාර්යාලය, මාලිගාවත්ත, කොළඹ 10. மாளிகாவத்தை செயலகம், மாளிகாவத்தை, கொழும்பு 10. Maligawatte Secretariat, Maligawatte, Colombo 10.

අංකය / இல. / No. ஓய்வூ/சுற்றுநிருபம்/2012 දිනය / திகதி / Date 20-12--2012

**ஓய்வூதியச் சுற்றுநிருபம்: 05/2012**

மாவட்டச் செயலாளர்கள் / பிரதேச செயலாளர்களுக்கு,

**2013 வரவு செலவுத்திட்ட யோசனைகளின் படி
ஓய்வூதியத்தினைத் திருத்தியமைத்தல்.**

2013 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்ட பிரேரிப்புக்களுக்கு அமைவாக அரசாங்க சேவைகளுக்கான படிகளைத் திருத்துதல் எனும் தலைப்பில் 13-12-2012 ஆந் திகதி கொண்டு வெளியிடப்பட்டுள்ள அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 18/2012 மீது தங்களது தயவுமிகு அவதானத்தினைத் திருப்புகின்றேன். அதன்படி கீழ் குறிப்பிடப்படும் வண்ணம் கருமமாற்றுதல் வேண்டும்.

**02. வாழ்க்கைப்படிக் கொடுப்பனவு**

2.1 அரச சேவையிலிருந்த அனைத்து ஓய்வூதியர்களுக்கும் வழங்கப்படும் வாழ்க்கைப்படிக் கொடுப்பனவு 01-01-2013 ஆந் திகதி முதல் மாதாந்தம் ரூ. 3,175.00 ஆகும்.

2.2 தங்களால் ஓய்வூதியம் வழங்கப்படும் நபர்களுக்கு பல ஓய்வூதிய நலன்கள் உரித்தாயின் (14-01-2011 திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 08/2010 (1) இன் படி) தகுந்த வண்ணம் வாழ்க்கைப்படிக் கொடுப்பனவினைக் செம்மைப் படுத்திக் கொடுப்பனவு செய்தல் வேண்டும். 01-01-2013ஆந் திகதி முதல் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைப்படிக் கொடுப்பனவான ரூ. 6,600.00 இனை மிகைக்கும் வண்ணம் ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைப்படிக் கொடுப்பனவினை வழங்காதிருக்கக் கருத்தாயிருத்தல் வேண்டும்.

2.3 வெளிநாடு சென்றுள்ள ஓய்வூதியர்கள் தொடர்பில் 30-06-2011 திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 05/2011 இல் காணப்படும் விதிமுறைகள் தொடர்ந்தும் அவ்வாறே செயற்படுத்தப்படும்.

**03. ஓய்வூதியத்துடன் கூட்டுச் சேர்க்கப்படும் கொடுப்பனவுகள்.**

3.1 20-12-2011 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2011 இல் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் கீழ்வரும் வண்ணம் திருத்தியமைக்கப்படுகின்றன.

(1) 31-12-2003 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்றுள்ள அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துடன் கூட்டுச் சேர்த்து வழங்கப்படும் கொடுப்பனவு 01-01-2013 ஆந் திகதி முதல் 30-06-2013 ஆந் வரை ரூ. 2,125.00 எனவும், 01-07-2013 ஆந் திகதி முதல் அது ரூ. 2,500.00 எனவும் வழங்கப்படுதல் வேண்டும்.


| | Telephone | Fax | | Telephone | Fax | | Telephone |
|---|---|---|---|---|---|---|---|
| Director General | 2431647 | 2342078 | W&OP | 2332346 | 2432214 | Policy | 2329580 |
| Director | 2432008 | 2342078 | PSPF | 2324375 | 2332347 | Forces | 2320439 |
| Director (F) | 2434974 | 2391403 | L.G.U. | 2342525 | 2342525 | Computation | 2434414 |
| Internal Auditor | 2329634 | 2329634 | Registration | 2329178 | - | Payments | 2431612 |

E-mail: pensions@sltnet.lk
Web site: www.pensions.gov.lk

(II) 01-01-2004 ஆந் திகதி மற்றும் 30-11-2004 ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலத்தினுள் ஓய்வு பெற்றுள்ள அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துடன் கூட்டுச் சேர்த்து வழங்கப்படும் கொடுப்பனவு 01-01-2013 ஆந் திகதி முதல் 30-06-2013 ஆந் வரை ரூ. 1,125.00 எனவும், 01-07-2013 ஆந் திகதி முதல் அது ரூ. 1,500.00 எனவும் வழங்கப்படுதல் வேண்டும்.

(III) 01-12-2004 ஆந் திகதி மற்றும் 31-12-2005 ஆந் திகதிக்கு இடைப்பட்ட காலத்தினுள் ஓய்வு பெற்றுள்ள அரச ஊழியர்களின் ஓய்வூதியத்துடன் கூட்டுச் சேர்த்து வழங்கப்படும் கொடுப்பனவு 01-01-2013 ஆந் திகதி முதல் 30-06-2013 ஆந் வரை ரூ. 1,000.00 எனவும், 01-07-2013 ஆந் திகதி முதல் அது ரூ. 1,250.00 எனவும் வழங்கப்படுதல் வேண்டும்.

3.2 20-12-2011 ஆந் திகதி கொண்ட ஓய்வூதியச் சுற்றுநிருபம் 11/2011 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விதிமுறைகள் அவ்வாறே நடைமுறைப்படுத்தப்படும்.

**04. மிகைக் கொடுப்பனவுகள்**

இவ்வறிவுறுத்தல்களைத் தவறாகப் பொருட்கொள்ளல் காரணமாக அல்லது ஆவணங்களில் அல்லது கணிப்பீடுகளின் போது ஏற்படும் ஏதாவதோர் வழுவின் காரணமாக ஏதேனுமோர் நபரிற்கு மிகையானதோர் தொகை வழங்கப்பட்டிருப்பின் அவ்வாறு மிகையாக வழங்கப்பட்ட தொகையினை மீளச்செலுத்த குறித்த நபர்கள் கடமைப்பட்டுள்ளார்கள். மேலும் போலியான கொடுப்பனவுகளை மேற்கொண்டுள்ள மற்றும் அவற்றிற்குப் பொறுப்புக் கூறவேண்டிய அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் குறித்த மேல் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**05.** குறித்த கணனி நிகழ்ச்சியினை www.pensions.gov.lk இணையத் தளத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும். கணனி நிகழ்ச்சி Pension Updating Programme – 2013 January மற்றும் அதற்குரித்தான புதிய ஓய்வூதியக் கணனி நிகழ்ச்சி Pension 12.83 ஆகும்.

**பீ.எம்.எம். பஸ்நாயக்க,**
**ஓய்வூதியப் பணிப்பளர் நாயகம் (க.பா).**

பிரதிகள் :

01. சனாதிபதி செயலாளர்.
02. பிரதமரின் செயலாளர்.
04. செயலாளர் - அரச நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு.
04. செயலாளர் - நிதி அமைச்சு.
05. கணக்காய்வாளர் நாயகம்.